# உயிர்த்தெழுதல்

## (28:1-15)

*கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், அவர் மரணத்தின் மீது மெய்யாகவே வெற்றிகொண்டார் என்று காண்பித்து, சுவிசேஷ வரலாறு பற்றிய மத்தேயுவின் விபரத்தினுடைய உச்சகட்டமாகச் செயல்படுகிறது (28:1-7)! அந்த ஞாயிற்றுக்கிழமையன்று உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை எதிர்கொண்ட பெண்கள், பயபக்தியுடனும் வணக்கத்துடனும் அவருக்கு முன்பாகக் குனிந்து பணிந்து கொண்டனர். அவர்களிடம் அவர், சீஷர்கள் தம்மைக் கலிலேயாவில் சந்திக்குமாறு கூறும்படி அறிவுறுத்தினார் (28:8-10). அதே வேளையில், வெறுமையான கல்லறை பற்றிய உண்மையை அடக்கும்படிக்கு, ரோமக் காவலர்களுக்கு யூதத் தலைவர்களால் இலஞ்சம் தரப்பட்டது (28:11-15). கலிலேயாவில் கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களைச் சந்தித்து அவர்களுக்கு பிரதான கட்டளையை - இராஜாவின் ஆவிக்குரிய இராஜ்யத்திற்கான அணிவகுத்துச் செல்லும் கட்டளைகளை (28:16-20) கொடுத்தலுடன் இந்த சுவிசேஷ விபரம் முடிவடைகிறது.*

### *வெறுமையான கல்லறை (28:1-7)*

***1ஒய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்துவருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்கவந்தார்கள்.***

***2அப்பொழுது, பூமி மிகவும் அதிரும்படி, கர்த்தருடைய தூதன் வானத்திலிருந்திறங்கிவந்து, வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின் மேல் உட்கார்ந்தான்.***

***3அவனுடைய ரூபம் மின்னல்போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல வெண்மையாகவும் இருந்தது.***

***4காவலாளர் அவனுக்குப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள் போலானார்கள்.***

***5தூதன் அந்த ஸ்திரீகளை நோக்கி: நீங்கள் பயப்படாதிருங்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன்.***

***6அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்;***

***7சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்குமுன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குச் சொன்னேன் என்றான்.***

***வசனம் 1.*** பெண்கள் இயேசுவின் கல்லறைக்குச் செல்லப் புறப்பட்டதை விவரிக்கும்போது, நாள்வரிசைப்படியான குறிப்பு ஒன்று உள்ளடக்கப்பட்டுள்ளது: **ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்துவருகையில்.** இந்தக் குறிப்பு மிக முக்கியமாக, இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்த நேரத்தைக் குறிக்கப் பயன்படுகிறது. NEB வேதாகமம், "ஓய்வு நாள் முடிந்தது, மற்றும் அது ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையாக இருந்தது" என்று கூறுகிறது.

இங்குள்ள குறிப்பு ஞாயிற்றுக்கிழமை காலையைக் குறிப்பதற்குப் பதிலாக சனிக்கிழமை மாலையைக் குறிப்பதாக இருந்தது என்று கடந்த காலத்தில் விவாதம் செய்யப்பட்டுள்ளது. "முடிந்து" என்பதற்கான (*opse*) கிரேக்க வார்த்தை சிலவேளைகளில் ஒரு வினையுரிச் சொல்லாகப் பயன்படுத்தப் பட்டது; அந்த விஷயங்களில் இது "பிற்பாடு" அல்லது "மாலையின் பிந்திய வேளையில்" என்று அர்த்தப்படக் கூடும். இருப்பினும் இவ்விடத்தில் இந்த வார்த்தை "பின்பு" என்று அர்த்தப்படும் படியாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது.[1] இத்துடன் கூடுதலாக, "விடிந்துவருகையில்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*epiphōskō* என்பதில் இருந்து வந்துள்ள) வினைச்சொல் "கொண்டு வந்த" என்று தரவழைக்கப்பட்டிருக்க முடியும், ஆனால் இந்த சந்தர்ப்பப் பொருளில் "பிரகாசித்தல்" அல்லது "உதயம்" என்பதே பொருத்தமான அர்த்தமாக உள்ளது.[2] பன்மைச் சொல் 1ம் வசனத்தில் இருமுறை காணப்படுகிறது. முதலாவது இவ்வார்த்தை "ஓய்வுநாள்" (ஏழாம் நாள்) என்பதைக் குறிக்கிறது, பின்பு இது "வாரத்தின் முதலாம் நாள்"[3] என்பதில் "வாரம்" (ஏழுநாட்கள்)[4] என்பதைக் குறித்து நிற்கிறது.

ஓய்வுநாள் அன்று பெண்கள் கல்லறைக்கு வரவில்லை *sabbatōn*, ஏனெனில் அது இளைப்பாறுதலின் நாளாக இருந்தது (லூக்கா 23:56). ஓய்வுநாள் முடிந்த பின்பு (இது நமது சனிக்கிழமை மாலை வேளையாகும்) அவர்கள் வரவில்லை, ஏனெனில் அப்போது இருட்டு நேரமாக இருந்திருக்கும். அதற்குப் பதிலாக அவர்கள், ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் வந்தனர். அவர்கள் "வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபோது கல்லறையினிடத்தில் வந்து" என்று மாற்கு கூறினார் (மாற்கு 16:2). அது "வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே" என்று லூக்கா கூறினார் (லூக்கா 24:1).[5] அதிகாலை வேளையில் பெண்கள் வருதல் என்பது அவர்கள் கிறிஸ்துவுக்குத் தங்கள் ஆழமான பக்தியைக் காண்பிப்பதற்கான -அவர்களின் முதல் வாய்ப்பான - நிகழ்வு என்பதற்குச் சுட்டிக்காண்பித்தலாக இருந்திருக்கும்.

**மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் மாத்திரமே** இங்கு பெயர் குறிப்பிடப் படுகின்றனர். இயேசு மரித்ததை அவர்கள் தூரத்தில் இருந்து கவனித்தனர், மற்றும் அவரது உடல் எங்கு அடக்கம் செய்யப்பட்டிருந்தது என்பதையும் அவர்கள் கண்டிருந்தனர் (27:55, 56, 61 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்). மாற்கு தமது பட்டியலில் சலோமே என்ற பெண்ணையும் உள்ளடக்கினார் (மாற்கு 16:1), இவ்விடத்தில் லூக்கா யோவன்னாள் மற்றும் "பிற பெண்களை"க் கூடுதலாகக் கூறினார் (லூக்கா 24:10; காண்க 8:3).

இந்தப் பெண்கள் **கல்லறையைப் பார்க்கவந்தார்கள்.** மிகவும் குறிப்பாக அவர்கள், இயேசுவின் உடலுக்குச் சுகந்தவர்க்கமிடும்படி வந்திருந்தனர்

(மாற்கு 16:1). யோசேப்பும் நிக்கொதேமுவும் ஏற்கனவே அவரது உடலை சுகர்ந்தவர்க்கங்களுடனே அபிஷேகித்திருந்தனர் (யோவான் 19:39, 40). ஆனால் அவரது உடலை பிற்பகல் 6:00 மணிக்குத் தொடங்கவிருந்த ஓய்வுநாளுக்கு முன்பே அடக்கம் செய்ய வேண்டும் என்ற அவசரத்துடன் அதைச் செய்திருந்தனர். இந்தப் பெண்கள் அதிகம் முழுமையாகச் சுகந்த வர்க்கம் இடவிரும்பினர்.

அவர்கள் கல்லறைக்கு செல்லுகையில், தாங்கள் எவ்வாறு கல்லறையின் நுழைவாயிலில் உள்ள பெரிய கல்லைப் புரட்டுவது என்று கலந்துரையாடிக் கொண்டிருந்தனர் (மாற்கு 16:3). யூதத்தலைவர்களின் கவலையைப் போக்குவதற்காகப் பிலாத்து, கல்லறையில் ஒரு ரோம முத்திரையிட்டு அதன் நுழைவாயிலில் காவல் வைத்திருந்ததை அவர்கள் அறியாதிருந்தனர் (27:62-66). அந்தப் பெண்கள், இயேசுவின் உடல் கல்லறையில் இருக்கும் என்று எதிர்பார்த்தனர் என்பது தெளிவு.

**வசனம் 2.** நிகழ்வுகளின் **எழுச்சியைப்** பற்றித் தெரிவிக்க, இதோ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*idou*) கிரேக்க வார்த்தை, மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது (28:2, 7, 9, 11, 20). இந்த வேளையில் பூமி மிகவும் **அதிரும்படியான ஒரு பூமியதிர்ச்சி** அந்தப் பகுதியை உலுக்கிற்று. Michael J. Wilkins, அவர்களின் கூற்றுப்படி, "பூமியதிர்ச்சிக்கு அடிக்கடி ஆளாகுதல் என்பது பாலஸ்தீனத்தின் முதன்மை புவியியல் பண்புகளில் ஒன்றாகும்." "அகாபாவளைகுடாவின் முகத்துவாரத்தில் இருந்து வடக்குநோக்கி ஏறக்குறைய 683 மைல்கள் நீளத்திற்கு டாரூஸ் மலையடிவாரத்தில் நீண்டு கிடக்கும் பெரிய தவறான பகுதியின் பாகமாக, யோர்தான் வெடிப்புச் சமவெளி உள்ளது என்ற காரணத்தினால்" இது குறிப்பாக உண்மையாக உள்ளது.[6] இருப்பினும் இது சாதாரண பூமியதிர்ச்சியாக இருக்கவில்லை. "படி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*gar*) கிரேக்க இடைச்சொல் காரணத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது. **கர்த்தருடைய தூதன்** இதற்குப் பொறுப்பாளியாக இருந்தார். தேவன் மற்றும் தூதர்கள் தரிசனமாவதற்கும் நியாயத்தீர்ப்பின் செயல்களுக்கும் தொடர்புடைய வகையில் பூமியதிர்ச்சிகள் வேதாகமத்தில் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளன (1 இராஜாக்கள் 19:12; மத்தேயு 24:7; நடபடிகள் 16:26; வெளிப்படுத்தின விசேஷம் 6:12; 8:5; 11:13, 19; 16:18).[7] பூமியதிர்ச்சி ஒன்று, இயேசு சிலுவையில் அறையப்பட்ட மற்றும் உயிர்த்தெழுந்த நிகழ்வுகள் இரண்டிலும் நேரிட்டு இருந்தது (27:51; 28:2).

இவ்விஷயத்தில் மத்தேயுவும் மாற்குவும் ஒரே ஒரு தூதனை மாத்திரமே குறிப்பிட்டனர். மாற்கு இவரை, "வெள்ளையங்கி தரித்த ... வாலிபன்" என்று விவரித்தார் (மாற்கு 16:5). இதற்கு மறுபக்கம் லூக்கா, "பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர்" என்று சித்தரித்தார் (லூக்கா 24:4). யோவானும் கல்லறையில் "இரண்டு தூதர்கள்" பற்றிப் பேசினார் (யோவான் 20:12). மற்ற சுவிசேஷ எழுத்தாளர்கள் ஒருவரைப் பற்றிய வார்த்தைகளைப் பயன்படுத்திய வேளையில் மத்தேயு அடிக்கடி இரண்டு பேரைப் பயன்படுத்தினார் (8:28; 20:30; 21:2 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்).

இந்த வேறுபாடு ஏன் உள்ளது? மத்தேயுவும் மாற்குவும் செய்தியின் இருதயம் போன்ற மையப் பகுதியைத் தருபவரைப் பற்றி வலியுறுத்துகையில், லூக்கா பெண்களிடம் பேசிய இரு தூதர்களையும் சுட்டிக்காண்பித்தார்

(லூக்கா 24:5). அவர்கள் பல்வேறுபட்ட மக்களையும் இரண்டு தூதர்களையும் பற்றிய வேறுபட்ட கருத்து நோக்குகளை அளித்தனர். ஒருவேளை ஒரு தூதர் முக்கியமான இடத்தில் நின்றுகொண்டிருக்கையில், மற்றவர் முக்கியத்துவம் குறைந்த இடத்தில் நின்றிருக்கலாம். அவர்கள் ஒவ்வொருவரும் பெண்களிடம் ஒருவேளையில் அல்லது மற்றொரு வேளையில் பேசியிருக்கலாம். நான்கு சுவிசேஷ எழுத்தாளர்களும் முக்கியமான விபரங்களைக் கொடுத்தனர்.

தூதர் வானத்திலிருந்திறங்கிவந்து, **வாசலிலிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி, அதின்மேல் உட்கார்ந்தார்** (27:60ன் மீதான விளக்கங்களைக் காணவும்). தூதரின் வல்லமை என்ற மாபெரும் வலிவு கல்லைக் கல்லறையில் இருந்து புரட்டிப் போட்டு பூமியதிர்ச்சிக்குக் காரணமாயிற்று. தூதர் கல்லைப் புரட்டிப் போடுகையில், அவர் யூதத்தலைவர்களால் அதன்மீது இடப்பட்டிருந்த முத்திரையை உடைத்தார் (27:66ன் மீதான விளக்கங்களைக் காணவும்). மேலும் அவர் நுழைவாயிலில் இருக்கும் கல்லைப் புரட்டிப்போடுவது யார் என்ற பெண்களின் இக்கட்டான நிலையையும் தீர்த்து வைத்தார் (மாற்கு 16:3). அவர் கல்லின் மீது உட்கார்ந்திருந்தது, தேவனுடைய முதன்மை நோக்கத்தின் நிறைவேற்றம் மற்றும் அதிகாரத்துவத்தைக் காண்பிக்கிறது.

**வசனம் 3.** தூதரின் **ரூபம் மின்னல் போலவும், அவனுடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போல் வெண்மையாகவும் இருந்தது** (காண்க மாற்கு 16:5; லூக்கா 24:4; யோவான் 20:12). மத்தேயுவினால் எடுத்துரைக்கப்படும் விவரிப்பு தூதரின் பிரகாசமான ஒளியைப் படம்பிடிக்கிறது. "மின்னல்" என்பது "விண்ணக ஜீவிகளின் தோற்றத்துடனும் (தானியேல் 10:6), சாத்தானின் வீழ்ச்சியுடனும் (லூக்கா 10:18), மனிதகுமாரனின் வருகையுடனும் (மத்தேயு 24:27)" தொடர்புபடுத்தப் பட்டுள்ளது.[8] வேதவசனங்களில், வெள்ளை உடை அணிதல் என்பது தூய்மை மற்றும் பரிசுத்தத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது (தானியேல் 7:9; மத்தேயு 17:2; வெளிப்படுத்தின விசேஷம் 3:4, 5, 18; 4:4; 6:11; 7:9, 13, 14; 19:14). "உறைந்த மழையைப்போல வெண்மை" என்பதும் வேதாகமரீதியான பொதுவான ஒப்பீடாக உள்ளது (சங்கீதம் 51:7; ஏசாயா 1:18; தானியேல் 7:9; வெளிப்படுத்தின விசேஷம் 1:14).

**வசனம் 4. கல்லறையில்** வைக்கப்பட்டிருந்த **காவலாளர் அவனுக்கு [தூதனுக்கு]ப் பயந்ததினால் திடுக்கிட்டுச் செத்தவர்கள்போலானார்கள்** (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 1:17). இங்கு Robert H. Gundry, அவர்களின் வார்த்தையைப் பயன்படுத்துவதென்றால், "நேர் எதிரான திருப்புகை என்ற வகையில், இயேசு உயிரோடிருக்கிறார் மற்றும் காவலர்கள் செத்தவர்களாகக் காணப்படுகின்றனர்."[9] பிற்பாடு அவர்கள் புத்துயிர்பெற்ற உடனே, அவர்களில் சிலர் எருசலேம் நகருக்குள் சென்று, நடந்திருந்த யாவற்றையும் பற்றி பிரதான ஆசாரியர்களிடத்தில் அறிக்கை செய்தனர் (28:11).

**வசனம் 5. அந்தப் பெண்கள்** கல்லறையை அடைந்த வேளையில், கல் புரட்டப் பட்டிருந்ததைக் கண்டு அவர்கள் எவ்வளவு திகைப்படைந்திருக்க வேண்டும்! அது இயேசு வெளியேறுவதற்காகப் புரட்டப்படவில்லை, அந்தக் கல் தன் நிலையில் இருந்தபோதே கூட அவர் கல்லறையை விட்டு வெளியேறி இருக்க முடியும்.[10] மாறாக அவரது சீஷர்கள் (சீஷிகள்) உள்ளே நுழைவதற்காகவே அந்தக் கல் புரட்டப் பட்டிருந்தது! கல்லறைக்குள் நுழைந்த பெண்கள், இயேசுவின் உடல் அங்கு இல்லை என்று கண்டனர், மற்றும்

“அதைக்குறித்து மிகுந்த கலக்கமடைந்தனர்” (லூக்கா 24:3, 4).

**தூதன்** அந்த ஸ்திரீகளை நோக்கி: **நீங்கள் பயப்படாதிருங்கள்** என்று கூறி மறு உறுதிப்படுத்தினார். பல சந்தர்ப்பங்களில் தூதர்கள் இந்தக் கட்டளையைத் தங்கள் விளக்கங்களுக்கு முன்னுரையாகக் கொடுத்தனர் (1:20; லூக்கா 1:13, 30; 2:10). தெய்வீக செய்தியாளர்கள் என்ற வகையில், அவர்கள் நீதிமான்களைப் பயமுறுத்துவதற்காக வரவில்லை.[11] அதற்குப்பதிலாக தேவன் சகலத்தையும் அவர்களின் நன்மைக்கு ஏதுவாகவே நடத்துவார் என்று அறிதலில் அவர்களை ஆறுதல் படுத்துவதற்காகவே தூதர்கள் வந்தனர். தேவன் மீது நம்பிக்கை கொள்ளுதல் என்பதே கவலைக்கும் பயத்திற்கும் எதிர்மருந்தாக உள்ளது.

தூதர் தொடர்ந்து, **சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன்** என்று கூறினார். அவர்கள், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உடலைத் தேடியே கல்லறைக்கு வந்திருந்தனர் என்று அவர் அறிந்திருந்தார் (1 கொரிந்தியர் 1:23; 2:2; கலாத்தியர் 3:1).

**வசனம் 6.** யோசேப்பினால் இயேசு அடக்கம் செய்யப்பட்டதை அந்தப் பெண்கள் கண்டிருந்தனர் (27:61), இப்போது ஒரு வெறுமையான கல்லறையை அவர்கள் கண்டனர். விடப்பட்ட தகவலைத் தூதர் நிரப்பினார்: **அவர் உயிர்த்தெழுந்தார்.** இங்குள்ள கிரேக்க வினைச்சொல் (*ēgerthē; egeirō* என்பதில் இருந்து வந்தது) செயப்பாட்டு வினையாக உள்ளது, சில பதிப்புகளில் “அவர் உயிர்ப்பிக்கப்பட்டார்” என்றுள்ளது (TEV; NEB; NRSV; NLT; JNT). செயப்பாட்டு வினை, செயல்முறையில் தேவனுடைய கிரியை இருப்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. CEV வேதாகமம் “தேவன் தாமே அவரை உயிர்ப்பித்தார்” என்ற மொழிபெயர்ப்புடன் இந்தக் கருத்தை வெளிப்படையாக்குகிறது. யூதத்தலைவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்து, ஜீவாதிபதியைக் கொலை செய்திருந்தனர்; ஆனால் தேவன் அவரை மரித்தோரில் இருந்து உயிர்ப்பித்திருந்தார் (நடபடிகள் 3:14, 15).

சுவிசேஷ எழுத்தாளர்கள் இயேசுவின் உண்மையான உயிர்த்தெழுதலை, அவரது உடலில் அவரது ஆவி திரும்பவும் வந்ததைப் பற்றி விவரிக்கவில்லை. அவரது கல்லறைத் துணிகள் எவ்வாறு நீக்கப்பட்டன என்பதைப் பற்றியோ (காண்க யோவான் 20:4-7) அல்லது அவர் கல்லறையில் இருந்து வெளியே வந்ததைப் பற்றியோ அவர்கள் அறிக்கை செய்யவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள், (1) கல்லறை வெறுமையாக இருந்தது, (2) இயேசு மீண்டும் உயிரோடிருந்தார் மற்றும் (3) அவரது உயிர்த்தெழுதல் உறுதிப்படுத்தும் செயல் முறையில் இருந்தது என்பவற்றை அவர்கள் அறிக்கை செய்தனர்.

உயிர்த்தெழுதலானது இயேசு திரும்பத் திரும்ப உரைத்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாக இருந்தது என்பதை, **தாம் சொன்னபடியே** என்ற சொற்றொடர் சுட்டிக்காண்பிக்கிறது (27:62, 63 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்). அவர் தமது சீஷர்களிடத்தில் எப்போதும், அவர்கள் தாங்கக் கடினமாக இருந்த வேளையிலும்கூட, சத்தியத்தையே பேசிவந்தார் (16:21-23; 26:21, 22, 31-35). இயேசுவின் மரணம் மற்றும் உயித்தெழுதல் பற்றிய அவரது முன்னுரைத்தல், அவரைப் பின்பற்றியவர்களுக்கு, அவர் உண்மையிலேயே உயிருடன் இருந்தார் என்ற சத்தியத்தைப் படிப்படியாக ஏற்றுக்கொள்ள உதவிற்று (லூக்கா 24:6, 8).

அந்தப் பெண்கள் ஏற்கனவே கல்லறைக்குள் பார்த்திருந்தனர் என்றாலும்

(லூக்கா 24:3), உள்ளே வந்து இன்னும் அதிகமாக ஆராய்ந்து பார்க்கும்படித் தூதர் அவர்களை அழைத்தார்: **கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்.** கிறிஸ்துவின் உடல் அங்கில்லை என்பதில் எந்தக் கேள்வியையும் அவர்கள் சிந்தைகளில் விட்டுவைக்க அவர் விரும்பவில்லை.

சிறு எண்ணிக்கையிலான மக்களின் - பெரும்பாலும் இயேசுவின் ஊழியக் காலத்தின்போது இருந்தவர்களின் - உயிர்த்தெழுதல் பற்றி வேதாகமம் அறிக்கையிடுகையில், அவரது சொந்த உயிர்த்தெழுதல் தனிப்பட்டதாக இருந்தது. இதற்கு முன்பு உயிர்ப்பிக்கப் பட்டவர்கள் இரண்டாம் முறை இறப்பை அனுபவித்தனர். இயேசு ஒருக்காலும் மீண்டும் மரியாதிருக்கும்படி உயிர்ப்பிக்கப்பட்டார் (ரோமர் 6:9). ஒவ்வொரு யூதரும் தாமும் எல்லா மக்களும் சரீரத்தில் உயிர்த்தெழுவோம் என்று நம்பிக்கையாயிருந்தனர்; இந்த ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில், இயேசு அந்த ஆழமான ஏங்குதலின் முதற்பலன் ஆனார் (1 கொரிந்தியர் 15:20, 23).[12] இது உண்மையாயிருக்கையில், _நித்திய ஜீவனுக்கென்று_ உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்து அவருக்குக் கீழ்ப்படிபவர்களுக்கு மாத்திரமே உரியது என்பது நினைவில் வைக்கப்பட வேண்டும் (1 கொரிந்தியர் 15:57, 58).

**வசனம் 7.** அந்தப் பெண்களிடம் தூதர், **சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள்** என்று அறிவுறுத்தினார். தெய்வீகத் தூதர் விசேஷமாக பேதுருவைத் தனிப்படுத்தினார் (மாற்கு 16:7). இது அவரது மும்மடங்கு மறுதலித்தலுக்குப் பின்னர் அவருக்கு நம்பிக்கை தருவதற்காகச் செய்யப்பட்டது என்பதில் சந்தேகம் இல்லை (மத்தேயு 26:69-75).

இயேசு [அவர்களுக்கு] **முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்** என்றும் சீஷர்களுக்குத் தகவல் தெரிவிக்கும்படி பெண்களுக்குக் கட்டளையிடப்பட்டது. மாற்கு 16:7ம் வசனத்தில் "அவர் உங்களுக்குச் சொன்னபடியே" என்ற வார்த்தைகள் கூடுதலாக உள்ளன. இந்தக் கட்டளை, இயேசு தமது மரணத்திற்கு முன்பே அவர்களுக்கு அறிவுறுத்தியதற்கு இணக்கமாக இருந்தது (26:32ன் மீதான விளக்கங்களைக் காணவும்).

கர்த்தரும் அவரது அப்போஸ்தலர்களும் பிரபலமான ஒரு இடத்தில் சந்திப்பார்கள் - அது இயேசு ஏற்கனவே குறிப்பிட்டிருந்த ஒரு மலையாகும் (28:16). கலிலேயா என்பது அவர்கள் யாவரும் வாழ்ந்திருந்த பகுதியாகும். அதுவே இயேசு தமது ஊழியத்தின் பெரும்பகுதியில் ஈடுபட்டிருந்த பகுதியாகவும் இருந்தது. கலிலேயாவில் அவர்கள் எருசலேமின் தலைவர்களுடைய இடையிடுதலில் இருந்து விலகியிருப்பார்கள்.

## திகைக்கச் செய்யும் சாட்சிகள் (28:8-10)

**8 அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்.**
**9 அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப் போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்.**
**10 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்;**

***நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார்.***

***வசனம் 8.*** *பெண்கள் தங்கள் இருதயங்களில் நேர் எதிரான உணர்வுகள் நிரம்பப் பெற்றவர்களாக,* ***கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டுப்போனார்கள்.*** *மாற்கு 16:8ம் வசனம், "நடுக்கமும் திகிலும் அவர்களைப் பிடித்தபடியால், அவர்கள் சீக்கிரமாய் வெளியே வந்து, கல்லறையை விட்டு ஓடினார்கள்; அவர்கள் பயந்திருந்தபடியினால் ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாமற் போனார்கள்" என்று கூறுகிறது. அவர்கள் தூதர்களைக் கண்டிருந்ததாலும் பயபக்திக்குரிய வகையிலான உயிர்த்தெழுதல் பற்றிய செய்தியை எதிர்கொண்டிருந்ததாலும்,* ***பயத்தினால்*** *பிடிக்கப் பட்டிருந்தனர். அந்த அனுபவம், நல்ல வகையிலான பயமான முழுமையான பயபக்தியை அவர்களில் நிரப்பியிருந்தது. கிறிஸ்து மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்பட்டிருந்தார் என்ற செய்தி (28:6) அவர்களுக்குப்* ***பெரிய சந்தோஷத்தையும்*** *கொண்டுவந்திருந்தது. அவர்கள் இயேசுவை அப்போது கண்டிருக்கவில்லை என்றாலும், தூதரின் சாட்சியம் மற்றும் வெறுமையான கல்லறை ஆகியவற்றினால் இந்த இரு உணர்வுகளுக்குள் அடித்துச் செல்லப்பட்டனர். இதன் விளைவாக அந்தப் பெண்கள் இதை* ***அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்.***

***வசனம் 9.*** *வழியிலே* ***இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு அவர்களை வாழ்த்தினார்.*** *இந்த இடத்தில் அவர்கள், உயிர்த்தெழுந்த ஆண்டவரைத் தாங்களே காணும் பாக்கியம் பெற்றனர். சீஷர்களை அவர்கள் கண்டபோது, உயிர்த்தெழுதல் பற்றிய அவர்களின் சாட்சியம், இரண்டாவதாகப் பெற்றதகவலாக மாத்திரம் அல்ல ஆனால் முதலாவதாகப் பெற்ற அறிதலாகவும் இருக்கும்.*

*அந்தப் பெண்கள்* ***கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்.*** *"பணிந்துகொண்டனர்" என்பதற்கான (proskuneō) சொற்றொடர் மத்தேயு சுவிசேஷத்தில் பதிமூன்று முறைகள் காணப்படுகிறது. சிலவேளைகளில் இது ஒருவரின் பாதங்களில் மரியாதை நிமித்தம் தாழவிழுந்து பணிதலைக் குறிக்கிறது, ஆனால் மற்ற விஷயங்களில் இது ஆவிக்குரிய ஆராதனையைச் சுட்டிக்காண்பிக்கிறது. 9 மற்றும் 17 ஆகிய வசனங்களில் இது இந்தப் பிந்திய அர்த்தத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ளது (2:2ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இயேசு தமது தெய்வீகத்தின் நிமித்தமாக இப்படிப்பட்ட கனத்தைப் பெற்றார் (14:33). இதற்கு நேர்மாறாக, புதிய ஏற்பாட்டில் தூதர்களும் மனிதர்களும் இதை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளனர் (நடபடிகள் 10:25, 26; 14:11-15; வெளிப்படுத்தின விசேஷம் 22:8, 9).*

***வசனம் 10.*** *தூதர்களால் பெண்களுக்கு அறிவிக்கப்பட்ட செய்தியை அவர்கள் சீஷர்களிடம் தெரிவிக்க வேண்டும் என்று இயேசு அவர்களிடம் கூறினார் (28:7):* ***பயப்படாதிருங்கள்; நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப்போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள்; அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்.*** *இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளும் முதலாவது மக்களாகப் பெண்களே இருந்தனர் என்பது*

குறிப்பிடத் தக்கதாகும். இந்த விபரம், சுவிசேஷ விபரங்களின் உண்மைத் தன்மையை விவரிக்கிறது. Douglas R. A. Hare அவர்கள், "யூத நீதிமன்றங்களில் பெண்கள் ஆண்களுக்குச் சமமான சாட்சிகளாகக் கருதப்படவில்லை என்பதால், இந்த எடுத்துரைப்பில் அவர்கள் இருந்தனர் என்பது, இது புறம்பே உள்ளவர்களை மனம் ஈர்ப்பதற்காக உருவாக்கப்படவில்லை என்பதை உத்தரவாதப்படுத்துகிறது" என்று கூறினார்.[13]

இந்தப் பெண்களை இயேசு சந்தித்த பின்பு எருசலேமில் நடந்தது என்ன என்பதைப் பற்றி மத்தேயு கூறுவதில்லை. மற்ற சுவிசேஷங்கள், அவற்றின் நாள்வரிசை முறைமையை நிச்சயத்துடன் மறுகட்டமைப்பது சிரமமாக இருந்தாலும், அந்த நிகழ்வுகளைப் பற்றிய சில பதிவுகளை அளிக்கின்றன.

சீஷர்கள் நிறைவாகக் கலிலேயாவில் இயேசுவைச் சந்திப்பார்கள் என்றாலும் (28:16), அவர்கள் எருசலேமில் குறைந்தது இன்னும் ஒரு வாரமாவது தங்கியிருப்பார்கள் - இது அவர்கள் புளிப்பில்லாத அப்பப் பண்டிகையை ஆசரித்து முடிக்க உதவியாயிருக்கும். இந்தக் காலகட்டத்தின்போது இயேசு அவர்களுக்குப் பல வேளைகளில் தரிசனமானார் என்று மற்ற சுவிசேஷங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன. அவரது உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவற்றிற்கு இடையிலான நாற்பது நாட்களில் மற்ற தரிசனங்களும் நடந்திருந்தன (நடபடிகள் 1:3).

## பொய் அறிக்கை (28:11-15)

***11அவர்கள் போகையில், காவல்சேவகரில் சிலர் நகரத்துக்குள்ளே வந்து, நடந்த யாவற்றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள்.***

***12இவர்கள் மூப்பரோடே கூடிவந்து, ஆலோசனைபண்ணி, சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து.***

***13நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய்விட்டார்கள் என்று சொல்லுங்கள்.***

***14இது தேசாதிபதிக்குக் கேள்வியானால், நாங்கள் அவரைச் சம்மதப்படுத்தி, உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள்.***

***15அவர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு, தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள். இந்தப் பேச்சு யூதருக்குள்ளே இந்நாள்வரைக்கும் பிரசித்தமாயிருக்கிறது.***

சுவிசேஷ எழுத்தாளர்களில் மத்தேயு மாத்திரமே, இயேசுவின் கல்லறையில் ரோமப் போர்ச்சேவகர் காவலுக்கு வைக்கப்பட்டது பற்றிக் கூறினார் (27:62-66). மேலும் தூதனைப் பார்த்தபோது அவர்கள் பயந்தது பற்றியும் (28:4) அவர்கள் யூதர்கள் மத்தியில் பரப்பிய பொய் அறிக்கை பற்றியும் (28:11-15) குறிப்பிட்டார்.

**வசனம் 11.** [ரோமானிய] ***காவல்சேவகரில் சிலர்*** - தங்களின் ஆரம்ப அதிர்ச்சியில் இருந்து (28:4) மீட்கப்பட்ட பின்பு - நடந்த யாவற்றையும் ***பிரதான ஆசாரியருக்கு அறிவித்தார்கள்.*** இந்தக் காவல் சேவகர்கள் ஆளுநரான பிலாத்துவினால் பிரதான ஆசாரியர்களின் அதிகாரத்தின் கீழ்

*வைக்கப்பட்டிருந்தனர் (27:62, 65, 66) அந்தக் காரணத்தினால் அவர்கள் பிரதான ஆசாரியரிடம் அறிக்கை செய்தனர். அத்துடன் கூடுதலாக அவர்கள், கல்லறையில் இருந்து இயேசுவின் உடல் சென்றதைத் தாங்கள் தடைசெய்யவில்லை என்று தங்கள் சொந்த அதிகாரிகளிடத்தில் ஒப்புக் கொண்டு அறிக்கை செய்யப் பயந்திருக்கலாம். உடல் திருடப்படவில்லை என்றாலும், நடந்திருந்தது என்ன என்பதைப் பற்றிய உண்மையை, நம்பிக்கையற்ற ரோம அதிகாரிகளை நம்பச் செய்தல் கடினமான இருந்திருக்கும்.*[14]

*காவல் சேவகர்கள்* **நடந்த யாவற்றையும்** *பிரதான ஆசாரியர்களுக்கு வெளிப்படுத்தினர். "யாவற்றையும்" என்ற வார்த்தையினால் மத்தேயு அர்த்தப்படுத்தியது என்ன? அவர்கள் பூமியதிர்ச்சியை உணர்ந்திருந்தனர், தூதனைக் கண்டிருந்தனர் மற்றும் வெறுமையான கல்லறையை உற்றுக்கவனித்து இருந்தனர் (28:4). ஒருவேளை அவர்கள், பெண்களிடம் தூதனால் கூறப்பட்ட பின்வரும் அறிவிப்பைக் கேட்டிருக்கலாம்: "அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்" (28:6).*

**வசனங்கள் 12, 13.** *காவல் சேவகர்களின் அறிக்கையினால் எச்சரிப்பு அடைந்த பிரதான ஆசாரியர்கள்,* **மூப்பரோடே கூடிவந்து, ஆலோசனைபண்ணினர்.** *பயப்பட்ட அதே விஷயம் மற்றும் முன்னெச்சரிக்கை எதற்காக மேற்கொள்ளப்பட்டதோ அதே விஷயம் (27:64-66) நடந்திருந்தது. உடல் அங்கு இல்லை, கல்லறை வெறுமையாயிருந்தது மற்றும் இயேசு உயிர்த்திருந்தார் என்பதே அறிக்கையாக இருந்தது. காவல்சேவகர்கள் தாங்களே வெறுமையான கல்லறைக்குச் சாட்சிகளாக இருந்தனர், மற்றும் அவர்களின் அறிக்கை மறுக்கப்பட இயலாததாக இருந்தது.*[15]

*யூதத்தலைவர்கள் தங்களின் விருப்பப் தேர்வுகளை ஆழ்ந்து சிந்தித்தபின்பு, அவர்கள் இலஞ்சம் கொடுக்க முடிவு செய்தனர்.* **அவர்கள் சேவகருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்தனர்.** *"வேண்டிய பணத்தை" என்ற சொற்றொடருக்கான (arguria hikana) கிரேக்கச் சொல், "போதுமான வெள்ளி" அல்லது "போதிய பணம்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அது இந்த மனிதர்களைத் திருப்திப்படுத்தும் அளவுக்கு "கணிசமான இலஞ்சமாக" இருந்தது. இதற்கு மாற்றாகக் காவல் சேவகர்கள்,* **நாங்கள் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டு போய்விட்டார்கள்** *என்று கூறி தவறான வசந்தியைப் பரப்ப வேண்டியிருந்தது. தலைவர்கள் யூகித்த இந்தக் கதை - எவரொருவரும் மறுக்க முடியாதிருந்த - வெறுமையான கல்லறைக்குக் கணக்கு ஒப்புவிப்பதாக இருந்தது.*

*அந்தக் காலகட்டத்தில் சீஷர்களின் நிலைப்பாடு, இந்தத் தவறான தகவல் எவ்வளவு முட்டாள் தனமாக இருந்தது என்பதைச் செயல்விளக்கப்படுத்துகிறது. இயேசுவின் சீஷர்கள் யாவரும் அவர் கைது செய்யப்பட்ட பின்பு பயத்தினால் பறந்தோடி இருந்தனர் (26:56). அவர் விசாரிக்கப்பட்டதைத் தூரத்தில் இருந்து கவனித்துக் கொண்டிருந்த பேதுரு அவரை மும்முறை மறுதலித்திருந்தார் (26:69-75). சிலுவையில் அறையப்பட்ட நிகழ்வு சீஷர்களை ஏமாற்றமும் குழப்பமும் அடையச் செய்திருந்தது (லூக்கா 24:21). இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றி அவர்கள் கேள்விப்பட்ட பின்பும்கூட, அவர்கள் இன்னமும் பயம் நிறைந்தவர்களாகப் பூட்டப்பட்ட கதவுகளுக்குப் பின்னால்*

கூடியிருந்தனர் (யோவான் 20:19, 26). இயேசுவின் உடலைப் பெற்றுக்கொண்டு வரும்படி ரோமானியக் காவல் சேவகர்களுக்கு அறைகூவல் விடுக்கும் நிலையில் இந்த மனிதர்கள் இல்லை. அவரது உடலைக் களவாடி அவர் உயிர்த்துவிட்டார் என்று உரிமைகோருதல் என்பது அவர்களின் பணிப்பட்டியலில் இல்லாதிருந்தது, ஏனெனில் அவர்கள் இன்னமும், உலகப்பிரகாரமான ஒரு இராஜ்யத்தையே தங்கள் சிந்தையில் கொண்டிருந்தனர் (26:51; நடபடிகள் 1:6).

**வசனம் 14.** உறக்கத்தில் விழுதல் மற்றும் கல்லறையைக் காவல் செய்யத் தவறுதல் ஆகியவை இந்தக் காவல் சேவகர்கள் தங்கள் உயிரை விலையாகக் கொடுத்ததைக் கேட்டிருக்கும். அவர்களின் பொய்யான அறிக்கை **தேசாதிபதிக்குக் கேள்வியானால்,** பிலாத்து விதிக்கும் எந்தத் தண்டனையில் இருந்தும் அவர்களைப் பாதுகாப்பதாகப் பிரதான ஆசாரியர்கள் காவல் சேவகர்களுக்கு உறுதி அளித்தனர்.

**வசனம் 15.** காவல் சேவகர்கள் **பணத்தை வாங்கிக் கொண்டு, தங்களுக்குப் போதிக்கப்பட்டபடியே செய்தார்கள்.** இதன் விளைவாக, **இந்தப் பேச்சு யூதருக்குள்ளே பிரசித்தமாயிருந்தது.** இப்படிப்பட்ட கதை நம்பப்பட்டது ஏன் என்பது புரிந்துகொள்ளக் கடினமானதாக உள்ளது. உண்மையாகவே காவல் சேவர்ககள் உறங்கியிருந்தால், கர்த்தருடைய உடலுக்கு நடந்திருந்தது என்ன என்பதை அவர்கள் எவ்வாறு அறிந்திருக்க முடியும்?

**இந்நாள்வரைக்கும்** என்ற கூடுதல் சொற்றொடர் (காண்க 11:23), மத்தேயு இந்த சுவிசேஷத்தை எழுதியபோது, ஒருவேளை உயிர்த்தெழுதலுக்கு முப்பது ஆண்டுகளுக்குப் பின்பும் கூட, அந்தப் பொய் இன்னமும் பரப்பப்பட்டுக் கொண்டிருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. ஜஸ்டின் மார்ட்டியர் கூற்றின்படி, இந்த ஏமாற்று இரண்டாம் நூற்றாண்டில் கூட மேலோங்கி இருந்தது. யூதர்கள், "அவர் சிலுவையில் இருந்து இறக்கப்பட்ட பின்பு வைக்கப்பட்ட கல்லறையில் இருந்து, இயேசுவின் சீஷர்கள் இரவு வேளையில், அவரது உடலைத் திருடிக்கொண்டு சென்று, அவர் மரித்தோரில் இருந்து உயிர்த்து விட்டார் என்றும் பரலோகத்திற்கு ஏறிச்சென்றார்" என்றும் [அவர்கள் ஏமாற்றினர்] என்று கூறினார்கள்.[16]

✧✧✧✧✧ **பாடங்கள்** ✧✧✧✧✧

## உயிர்த்தெழுதலுக்குப்பின் தரிசனங்கள் (அதிகாரம் 28)

இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தார் என்பதற்கு நாம் பெற்றுள்ள உண்மையான நிரூபணம் என்ன? உயிர்த்தெழுதலுக்குப் பின்பு (பவுலுக்குத் தரிசனமானது உட்பட) மொத்தம் பன்னிரெண்டு தரிசனங்களை நாம் வாசிக்கிறோம். உயிர்த்தெழுதல் என்பது வரலாற்றுப் பூர்வமான உறுதிப்பாடாக உள்ளது. லூக்கா, "அவர் பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்" என்று

*எழுதினார் (நடபடிகள் 1:3).*

*மகதலேனா மரியாளுக்கு இயேசு தரிசனம் கொடுத்தார் (மாற்கு 16:9; யோவான் 20:14-17), மற்றும் அதற்குப் பின்பு பலபெண்கள் கல்லறையை விட்டுப் புறப்பட்டுச் செல்லுகையில் அவர்களுக்கும் தரிசனம் கொடுத்தார் (28:9, 10). லூக்கா மற்றும் பவுல் ஆகியோரிடமிருந்து நாம், பேதுரு தனித்து இருக்கையில் அவருக்கு இயேசு தரிசனமானார் என்று அறிகிறோம் (லூக்கா 24:34; 1 கொரிந்தியர் 15:5). மேலும் அவர் எம்மாவு செல்லும் சாலையில் இரண்டு சீஷர்களுக்கும் தரிசனம் கொடுத்தார், அவர்களில் ஒருவர் கிலெயோப்பா என்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளார் (லூக்கா 24:13-35). அவர் அப்போஸ்தலர்கள் ஒன்றாக இருக்கையில் - முதலில் தோமா இல்லாத போதும் (யோவான் 20:19, 24) மீண்டும் தொடர்ந்து வந்த வாரத்தில், தோமா உட்பட அவர்கள் எல்லாரும் இருந்தபோதும் (யோவான் 20:26) - தரிசனம் கொடுத்தார். பின்பு அவர், கலிலேயாக்கடலருகில் ஏழு அப்போஸ்தலருக்கு தரிசனம் தந்தார் (யோவான் 21:1-23). மத்தேயு சுவிசேஷத்தின்படி அவர், கலிலேயாவில் பெயர் தரப்படாத மலை ஒன்றின்மீது அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமானார், அப்போது அவர் பிரதான கட்டளையை அவர்களுக்குக் கொடுத்து தாம் அவர்களோடு எப்போதும் இருப்பதாக வாக்களித்தார் (28:18-20). அவர் ஒரே வேளையில் ஐந்நூறுக்கும் அதிகமான சீஷர்களுக்கும் தமது சகோதரர் யாக்கோபுக்கும் தரிசனமானார் என்று பவுல் எழுதினார் (1 கொரிந்தியர் 15:6, 7). பின்பு அவர் தாம் பரத்துக்கேறுவதற்கு முன்னர் பதினோரு அப்போஸ்தலர்களுக்குத் தரிசனமானார் என்று பவுல் எழுதினார் (லூக்கா 24:50, 51; நடபடிகள் 1:3-12). பவுல், "எல்லாருக்கும் பின்பு, அகாலப்பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 15:8).*

*இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தெழாதிருந்தால் நேரிட்டு இருக்கக் கூடிய எதிர்மறை விளைவுகளைப் பற்றி எழுதிய பின்பு பவுல், "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 15:20). இலாசருவின் சகோதரியான மரியாளிடம் இயேசு, "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" என்று கூறினார் (யோவான் 11:25, 26). அவர் உயிர்த்து எழுந்ததால், பவுலுடன் சேர்ந்து நாம், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று கூற முடியும் (1 கொரிந்தியர் 15:57).*

## *"அவர் உயிர்த்தெழுந்தார்" (28:1-17)*

*கல்லறைக் கற்கள் அவற்றில் என்ன வார்த்தைகள் செதுக்கப்பட்டிருந்தாலும், "வாழ்ந்திருந்து ஆனால் இப்போது மரித்துள்ள ஒருவர் இங்கு கிடக்கிறார்" என்று அறிவிக்கின்றன. இதற்கு நேர்மாறாக, இயேசுவின் கல்லறை வெறுமையாயிருந்தது, அது மாறுபட்ட ஒரு செய்தியை அறிவித்தது. இயேசு மரித்த நாள் வரலாற்றிலேயே மிகவும் இருண்ட நாளாக இருந்தது, ஆனால் மூன்று நாட்களுக்குப் பின்பு அது மாறிற்று. இயேசு இன்னும் மரித்தவராகவே*

*இருந்தால், நாம் "எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருப்போம்" என்று பவுல் கூறினார் (1 கொரிந்தியர் 15:19).*

*சட்டப்பூர்வமான எந்த அடிப்படையின்மீது நாம் உயிர்த்தெழுதலில் நமது நம்பிக்கையை வைக்க முடியும்?*

*உயிர்த்தெழுதல் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்தது (28:6). இது பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்தது (சங்கீதம் 16:8-11; ஏசாயா 53:10-12; ஓசியா 6:2), மற்றும் இயேசு தாமே இதைப் பற்றிப் பேசியிருந்தார் (16:21; 17:23; 20:19; 27:40, 63; யோவான் 2:19).*

*உயிர்த்தெழுதல் நிரூபிக்கப்பட்டிருந்தது (28:7-10). இது கண்ணால் கண்ட சாட்சியங்களால் உறுதிப்படுத்தப் பட்டிருந்தது, மற்றும் வெறுமையான கல்லறை நிரூபணமாக இருந்தது. இத்துடன் கூடுதலாக, இயேசுவினுடைய சீஷர்களின் மறுரூபமாக்கப்பட்ட வாழ்வு, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தார் என்பதற்குச் சாட்சியம் கொடுத்தது. இன்றைய நாட்களில் சபையானது, உயிர்த்தெழுந்த நமது கர்த்தருக்குச் சாட்சியமாக நிற்கிறது.*

*உயிர்த்தெழுதல் நம்பிக்கையின்மையுடன் பெறப்பட்டது (28:11-17). நிரூபணங்கள் இருந்த போதிலும்கூட, தொடக்கத்தில் இருந்தே மக்கள் சந்தேகம் கொண்டிருந்தனர். உயிர்த்தெழுதலை நிரூபிக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*உயிர்த்தெழுதல் ஏற்படுத்தும் வேறுபாடு என்ன? அதை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்களின் வாழ்வில் அது ஒரு நித்திய வேறுபாட்டை ஏற்படுத்துகிறது!*

## இயேசு உயிருடன் இருக்கிறார் (28:1-10)

*அரிமத்தியாவூர் யோசேப்பும் நிக்கொதேமுவும், யோசேப்பின் கல்லறையில் இயேசுவின் உடலைப் புதைத்தபின்பு, அவர்கள் ஓய்வு நாளுக்கு ஆயத்தம் செய்வதற்காக இல்லம் சென்றனர். அது இந்த வரலாற்றின் முடிவாக இருந்திருந்தால், நாம் கவலையாக இருப்பதற்குக் காரணம் யாவற்றையும் கொண்டிருப்போம் - ஏனெனில் நாம் நம்பிக்கையற்ற ஒரு உலகத்தில் வாழ்பவர்களாக இருந்திருப்போம். கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்" என்று எழுதினார் (1 கொரிந்தியர் 15:19). ஏன்? இயேசு மரித்தோரில் இருந்து உயிர்த்தெழாதிருந்தால், நமது விசுவாசமும் நமது பிரசங்கித்தலும் வீணானவைகளாக இருக்கும், இயேசு உயிர்த்தபின் அவரைக் கண்டதாகக் கூறிய அப்போஸ்தலர்களும் மற்றவர்கள் யாவரும் பொய்யர்களாக இருந்திருப்பார்கள், நாம் இன்னும் நமது பாவங்களிலேயே இருந்திருப்போம், கர்த்தருக்குள் மரிப்பவர்கள் அழிந்து போயிருப்பார்கள் மற்றும் இந்த உலகம் இன்னமும் ஒரு மீட்பரைப் பெற்றிராது இருந்திருக்கும் (1 கொரிந்தியர் 15:14-18)! இதற்கு நேர்மாறாக, பவுல், "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" என்று உறுதிப்படுத்தினார் (1 கொரிந்தியர் 15:20). வேறொரு இடத்தில் அவர், இயேசு "... பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய்ரூபிக்கப்பட்ட*

*தேவகுமாரனுமாயிருக்கிறார்" என்று கூறினார் (ரோமர் 1:4).*

*இயேசு மரித்த நாள், மனித வரலாற்றில் நேர்ப்பொருளிலும் உருவகத்திலும் மிகவும் இருளான நாளாக இருந்தது. அவருக்கு மிகவும் நெருக்கமானவர்கள் கூட அவரை மீண்டும் உயிருடன் தாங்கள் பார்ப்போம் என்று விசுவாசிக்கவில்லை. அவரது சீஷர்கள் எருசலேமில் ஒரு மேல்வீட்டில் ஒளிந்து கொள்ளச் சென்றனர் (யோவான் 20:19). மரித்தோரில் இருந்து மற்றவர்களை அவர் உயிர்ப்பித்து இருந்ததை அவர்கள் கண்டிருந்தபோதும், உண்மையிலேயே அவர் மீண்டும் உயிருடன் வருவார் என்று அவர்கள் நம்பவில்லை. இருப்பினும் வாரத்தின் முதல் நாளில், கல்லறையில் அவரது உடல் காணவில்லை என்ற அறிக்கைகள் சுற்றுக்கு விடத் தொடங்கப்பட்ட போது எல்லாம் மாறிற்று. அவரைப் பின்பற்றியவர்கள், ஒருவர்பின் ஒருவராக, அவரைக் கண்டிருந்தது பற்றிய வியப்புக்குரிய வரலாறுகளைப் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினர். சிலர் அவருடன் நடந்திருந்தனர், பேசியிருந்தனர் மற்றும் அவருடன் உணவுகூட உண்டிருந்தனர். இவைகள், வெறிபிடித்த பின்பற்றாளர்களின் மாயத்தோற்றத்தின் காரணமாகக் கூறப்பட்ட அறிக்கையாக இருக்கவில்லை என்பது விரைவிலேயே தெளிவாயிற்று. இயேசு உண்மையிலேயே உயிரோடிருந்தார்! அந்த உண்மையானது ஆச்சரிய விதமாக எல்லாவற்றையும் மாற்றுகிறது.*

## இயேசுவைப் பின்தொடர்ந்த பெண்கள் *(28:1-10)*

*யூத சமுதாயத்தில் பெண்கள் சிலவேளைகளில் கீழாகக் கண்ணோக்கப் பட்டிருந்தாலும்,[17] அவர்களை இயேசு, மாபெரும் மரியாதையுடன் கண்ணோக்கினார். அவர்களைப் படைப்பின்போது தேவன் தொடக்கத்தில் நடத்திய வகையிலேயே அவரும் நடத்தினார். அவரது ஊழியத்தில் அவர்கள் பணிசெய்த பின்வரும் வழிகளைக் கவனியுங்கள்:*

1. *மீட்கப்படுவதில் அவர்கள் சமமான தகுதி உடையவர்களாக இருந்தனர் (யோவான் 4:1-42).*
2. *அவர்கள் அவருடைய சீஷர்களாக இருக்கும்படி அழைக்கப்பட்டனர் (12:48-50).*
3. *அவர்கள் அறிவுறுத்தலைப் பெற்றனர் (லூக்கா 10:38-42).*
4. *அவர்கள் இயேசுவின் ஊழியத்தில் பங்களித்தனர் (லூக்கா 8:1-3).*
5. *அவர்கள் இயேசுவுடன் பிரயாணம் சென்றனர் (27:55, 56).*
6. *அவரது இருளான வேளையில் அவர்கள் விசுவாசம் நிறைந்தவர்களாக இருந்தனர் (27:55, 56).*
7. *உயிர்த்தெழுதலுக்கு அவர்கள் முதலாவது சாட்சியாக இருந்தனர் (28:7, 10; மாற்கு 16:9, 10; லூக்கா 24:1-10; யோவான் 20:18).[18]*

டேவிட் ஸ்டீவர்ட்

## மகதலேனா மரியாள் (28:1)

மகதலேனா மரியாள் வரலாற்றில் மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட

*ஒருத்தியாக இருக்கிறாள் என்பதில் சந்தேகம் இல்லை. அவள் ஒரு விபசாரி என்று அழைக்கப்பட்டிருக்கிறாள், ஆனால் இது உண்மை என்று கருத்துக்கூறக் கூடிய எதுவும் புதிய ஏற்பாட்டில் இல்லை. நவீன கதைச் சித்தரிப்பானது அவள் இயேசுவைக் கவர்ந்து இழுக்க அல்லது அவளது மனைவியாக இருக்கவும் முயற்சி செய்தவள் என்று சித்தரிக்கிறது. விபசாரத்தில் பிடிபட்ட பெண் (யோவான் 8:1-11) அல்லது இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அழுது அவற்றைத் தனது கேசத்தினால் துடைத்து, பின்பு அவற்றை முத்தமிட்டு வாசனைத் தைலத்தினால் அபிஷேகித்த பாவம் நிறைந்த பெண் (லூக்கா 7:37, 38) என்று மரியாளைப் பலர் தவறாக அடையாளப்படுத்துகின்றனர். அவள் இந்தப் பெண்களில் யாருமல்ல, ஆனால் அவள் யாராகத் தான் இருந்தாள்?*

*மரியாள் மக்தலாவில் இருந்து வந்தவளாக இருந்தாள், இது கலிலேயாவின் தென்மேற்குக் கடற்கரையில் இருந்தது (15:39ன் மீதான விளக்கங்களைக் காணவும்). அவள் இயேசுவை அன்புசெய்தாள், ஆனால் அவர்களின் உறவில் பாலுறவு ரீதியான விஷயம் எதுவும் இருந்ததில்லை. அவளிடத்தில் இருந்த ஏழு அசுத்த ஆவிகளை இயேசு துரத்தியிருந்ததன் காரணமாக அவரை அன்புகூர அவள் நல்ல காரணம் கொண்டிருந்தாள் (மாற்கு 16:9; லூக்கா 8:2). அவள் இயேசுவுக்குத் தன்னை அர்ப்பணித்துப் பின்பற்றினாள், பின்பு தனது நிதியைக் கொண்டு இயேசுவின் ஊழியத்திற்கு உதவினாள் (லூக்கா 8:2, 3). இயேசு மரித்தபோது சிலுவையின் அருகில் நின்றுகொண்டிருந்த கடைசித் தனிநபர்களில் மரியாள் ஒருத்தியாக இருந்தாள் (27:56; மாற்கு 15:40; யோவான் 19:25), மற்றும் அவள் உயிர்த்தெழுதலின் அதிகாலையில் கல்லறையில் முதலில் இருந்தவர்களில் ஒருத்தியாகவும் இருந்தாள் (மாற்கு 16:1). மாற்கு 16:9 ன்படி அவள் இயேசு தரிசனம் கொடுத்த முதல் நபராக இருந்தாள்.*

---

குறிப்புகள்

[1]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 746. [2]Ibid., 386. [3]*இந்தச் சொற்றொடர் நடபடிகள் 20:7 லும் காணப்படுகிறது, அங்கு சீஷர்கள் அப்பம் பிட்கக் கூடியிருந்தனர். அந்த வசனத்தில்* NEB *வேதாகமம் இந்தச் சொற்றொடரை "சனிக்கிழமை இரவு" என்று தவறாக மொழிபெயர்த்துள்ளது.* [4]Bauer, 909-10. [5]*மகதலேனா மரியாளை யோவான், "வாரத்தின் முதல்நாள் காலையில், அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள்" வந்தாள் என்று விவரித்தார் (யோவான் 20:1). மகதலேனா மரியாளை மாத்திரம் அவர் குறிப்பிட்டார் என்ற உண்மையும் வானம் இன்னும் இருட்டாயிருந்தது என்பதும், ஒப்பீட்டு சுவிசேஷங்களில் இருந்ததைக் காட்டிலும் இது முந்திய பயணமாக இருந்தது என்று கூறும்படி சில கல்வியாளர்களை வழிநடத்திற்று. இருப்பினும், சுவிசேஷ விபரங்கள் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படும்போது, இவள் மற்ற பெண்களுடன் வந்தாலும், யோவான் அவள் மீதுகவனம் குவித்தார். இத்துடன் கூடுதலாக, சூரியன் உதிக்கத் தொடங்கியபோது சார்பளவில் இன்னமும் இருட்டாயிருந்தது. யோவான் ஒப்பீட்டுச் சுவிசேஷ எழுத்தாளர்களின் அதே காட்சியையே விவரித்தார், ஆனால் மாறுபட்ட கருத்துநோக்கில் அதை விவரித்தார்.* [6]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary,* vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.:

Zondervan, 2002), 185. இந்த வரைப்படத்தில் காண்க D. R. Bowes, "Earthquake," in *The Zondervan Pictorial Encyclopedia of the Bible*, ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1975), 2:179. [7]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 2, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 169. [8]Ibid. [9]Robert H. Gundry, *Matthew: A Commentary on His Literary and Theological Art* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 588. [10]இயேசு உயிர்த்தெழுந்த தமது சரீரத்தில், சுவர்களினூடே கடந்து செல்லக் கூடிய திறன் கொண்டிருந்தார் (யோவான் 20:19, 26).

[11]தூதன் ஆறுதலின் எந்த வார்த்தைகளுடனும் பயமடைந்த காவல்வீரர்களுக்கு உரைக்க வில்லை என்பதைக் கவனியுங்கள். [12]Wilkins, 185. [13]Douglas R. A. Hare, *Matthew*, Interpretation (Louisville: John Knox Press, 1993), 331. காண்க Josephus *Antiquities* 4.8.15; Mishnah *Rosh Hashanah* 1.8. [14]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 740. [15]Lewis, 171. [16]Justin Martyr *Dialogue with Trypho* 108. [17]காண்க Josephus *Against Apion* 2.25. என்ற புத்தகத்தில் காணவும். அவர்களின் குறைவான தராதரம் "பெண்கள், அடிமைகள், மற்றும் சிறுவர்கள்" என்ற சூத்திரத்தில் பிடிக்கப்பட்டுள்ளது (Mishnah *Sukkah 2.8; Berakoth 3.3*). [18]Wilkins, 181 லிருந்து எடுக்கப்பட்டது.

| உயிர்த்தெழுதலுக்குப் பின்பு நாற்பது நாட்கள் காலகட்டத்தின்போது கிறிஸ்துவின் தரிசனங்கள் | |
|---|---|
| *1. கல்லறையில் மகதலேனா மரியாளுக்கு* | *மாற்கு 16:9-11; யோவான் 20:11-18* |
| *2. கல்லறையைவிட்டுப் புறப்பட்ட பெண்களுக்கு* | *மத்தேயு 28:8-10* |
| *3. எருசலேமில் பேதுருவுக்கு* | *லுக்கா 24:34; 1 கொரிந்தியர் 15:5* |
| *4. எம்மாவு செல்லும் சாலையில் இரு சீஷர்களுக்கு* | *மாற்கு 16:12, 13; லூக்கா 24:13-32* |
| *5. பத்து அப்போஸ்தலர்களுக்கு (தோமா இல்லாத போது) எருசலேமில் மேல்வீட்டில்* | *மாற்கு 16:14; லூக்கா 24:36-43; யோவான் 20:19-25* |
| *6. எருசலேமில் மேல்வீட்டில் பதினோரு அப்போஸ்தலர்களுக்கு (தோமா உட்பட)* | *யோவான் 20:26-29; 1 கொரிந்தியர் 15:5* |
| *7. கலிலேயாக் கடல் அருகில் ஏழு சீஷர்களுக்கு* | *யோவான் 21:1-23* |
| *8. கலிலேயா மலையில் பதினோரு அப்போஸ்தலர்களுக்கு* | *மத்தேயு 28:16-20; மாற்கு 16:15-18* |
| *9. 500க்கும் அதிகமான சீஷர்களுக்கு* | *1 கொரிந்தியர் 15:6* |
| *10. கர்த்தரின் சகோதரர் யாக்கோபுவுக்கு* | *1 கொரிந்தியர் 15:7* |
| *11. ஒலிவ மலையின் மீது* | *மாற்கு 16:19; லூக்கா 24:44-53; நடபடிகள் 1:3-8; 1 கொரிந்தியர் 15:7* |